[1970 பிப்ரவரி 23

THIRU K. VINAYAKAM : Apart from the bye-law or the rule under reference, is there not a general rule that a co-operative society could under no circumstances borrow beyond eight times the capital invested in that society?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : மாண்புமிகு உறுப்பினர் சொல்வது பங்குத் தொகை மட்டும். அது மட்டுமல்ல. பங்குத் தொகை, ரிசர்வ் நிதி இவற்றைச் சேர்த்துத்தான் சில வங்கிகளுக்கு எட்டு மடங்கு, சில வங்கிகளுக்கு 20 மடங்கு, சில வங்கிகளுக்கு 25 மடங்கு என்பதாக அந்த அந்த வங்கிகளுக்கு உரியவாறு விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

Electricity Department Offices for Sathankulam

* Q 148—THIRU T. MARTIN : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is any proposal pending now on the opening of a Deputy Chief Accountant Office and Assistant Engineer's Office (Electricity) at Satankulam in Tirunelveli district; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சாத்தான்குளத்தைத் தலைமையிடமாகக் கொண்டு இயக்குதல் பேணுதல் துணைக் கோட்டம் ஒன்றைத் துவக்குவதற்கு 1969 செப்டம்பர் திங்களில் மின்சார வாரியம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அந்தத் துணைக் கோட்டம், உதவிப் பொறியாளர் (மின்சாரம்) பொறுப்பில் செயல் பட்டு வருகிறது. சாத்தான்குளத்தில் துணைத் தலைமைக் கணக்கர் அலுவலகம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் இல்லை.

திரு. டி. மார்டின் : நெல்லை மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, எங்கள் சாத்தான்குளம் பகுதியில் முக்கியமாக தட்டார்மடம், புத்தன் அரவை போன்ற இடங்களில் இருந்ததெல்லாம் மின்சாரக் கட்டணம் கட்டுவதற்கு நாங்குநேரி எஸ்.ஓ. ஆபீசுக்குப் போக வேண்டியிருப்பதால் சாத்தான்குளத்திலேயே இந்த ஊர்களில் ஏதாவது ஒன்றில் எஸ்.ஓ. ஆபீஸ் திறக்க உத்தேசம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சாத்தான்குளத்தில் வருவாய்த் துறை அலுவலகம் திறக்கப்பட வேண்டுமென்றால், 17 ஆயிரம் சர்வீஸ் தேவை. ஆனால் இங்கே 5 ஆயிரம் சர்வீசுக்குக் கீழே இருப்பதனால் திறக்க இயலாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே. தமிழக அரசு மின்சாரம் வழங்குவதில் காட்டுகிற தாராளத்தை அடிப்படையாக வைத்து ஏராளமான மக்கள் புதிய வீடுகளுக்கும், மற்ற இடங்களுக்கும் மின்சார கனெக்ஷன் கொடுப்பதனால் அவர்கள் மின்சாரக் கட்டணம் கட்ட திருநெல்வேலி போன்ற இடங்க

1970 பிப்ரவரி 28]

ளுக்குச் சென்று காலை முதல் மாலை வரை கியூவில் நிற்கிற சங்கடத்தைத் தவிர்க்க புள்ளி விவரத்தை வைத்து அதிகமான உதவியாளர்களை நியமிக்க முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அப்படி உண்மையாகச் சங்கடம் இருக்குமானால் விசாரித்து அதிகமான அதிகாரிகளைப் போடலாம் என்பதை ஒத்துக் கொள்கிறேன்.

திரு. டி. மார்டின் : நான் கேட்ட கேள்வியில் சாத்தான்குளம் பகுதியில் எஸ். ஓ. (சூப்ரவைசர் ஆபீஸ்) ஏற்படுத்துவதற்கு வழி வகை செய்யப்படுமா என்று கேட்டேன். அதற்கான பதிலைப் பெற விழைகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கேட்டிருக்கிற கேள்வியில் இரண்டு பகுதிகளும் இருக்கின்றன. ஏற்கெனவே அந்தப் பகுதியில் ஏ.இ. ஏற்படுத்தப்பட்டு இரண்டு சூப்ரவைசர்களும் நியமிக்கப் பட்டிருப்பதனால் அதுவே போதுமானது, சாத்தான்குளத்திற்குத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

Thiru K. VINAYAKAM : May I know whether the consumers of electricity in Satankulam, who want to pay the bill amount, can pay the amount and settle the account in Satankulam itself or whether they have to travel any distance, and if they have to travel, what the distance is?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இப்பொழுது இருக்கிற இடத்திற்கும், சாத்தான்குளத்திற்கும் 18 மைல் இருக்கிறது. ஆயினும் அங்கங்கே உள்ள இடங்களில் உள்ள சர்வீஸ் கட்டணத்தை வசூல் செய்வதற்கு பில் கலெக்டர்கள் என்று போட்டிருக்கிறோம். பில் கலெக்டர்களே அங்கங்கு சென்று வசூல் செய்கிறார்கள்.

திரு. நா. சௌந்திரபாண்டியன் : திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள லெவிஞ்சிபுரம், இருக்கன்துறை, செட்டிகுளம், கருங்குளம் எல்லாம் தக்கலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. செட்டிகுளம், லெவஞ்சிபுரம் போன்ற இடங்களில் இருந்ததெல்லாம் அங்கே போவது சிரமமாக இருப்பதனால் புதியதாக வள்ளியூரில் அமைக்கப்பட்டிருக்கும் துணைக் கணக்காயர் அலுவலகத்துடன் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்கான விவரம் இல்லை. தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் . . . . .

திரு. கே. விநயகம் : சாத்தான்குளத்தில் இருந்து தஞ்சை மாவட்டத்திற்கு வந்துவிட்டாரே . . . (சிரிப்பு)

திரு. என். கிட்டப்பா : தஞ்சை மாவட்டத்தில் அரசு தன்வயப் படுத்திய மின்சார நிறுவனங்களின் அலுவலகக் கட்டிடங்கள் தனியாகவும், ஏற்கெனவே இருந்த அரசு நிறுவனங்கள் தனியான

அலுவலகக் கட்டிடத்திலும் இயங்கி வருவதை விட்டு இரண்டும் ஒரே இடத்தில் செயல்பட ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இப்போது அப்படி ஒரு யோசனை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) நடைமுறைக் கேள்விகள்

(அ) ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் பேரவைத் தலைவர் அறையில் நிராகரிக்கப்பட்டது குறித்து

திரு. கரு. சீமைச்சாமி: சார், ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் விதி 42-ன் கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருந்தேன். அது பற்றி நிதிநிலை அறிக்கையில் பேசிக்கொள்ளலாம் என்று தாங்கள் அதை நிராகரித்து விட்டீர்கள். நான் தங்கள் தீர்ப்பை ஆட்சேபிக்கவில்லை. ஆயினும், இன்றைக்கே வேறு இரண்டு தீர்மானங்களுக்குத் தாங்கள் அனுமதி அளித்திருக்கிறீர்கள். இது எந்த விதியின் அடிப்படையில் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை. பேரவைத் தலைவர் அவர்கள் ஒருதலைப்பட்சமாக நடந்திருப்பதுபோலப் பேச முற்படுவது சரியல்ல. அறையில் கொடுத்த தீர்ப்பை அவையில் பேசக்கூடாது என்றும் விதிகள் இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள் உரிமைப் பிரேரணை கொடுத்திருக்கிறார்கள். அதை நாளைக்கு எடுத்துக்கொள்கிறேன்.

மு.ப. 10–00 அடுத்து, டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு . . .

(ஆ) மாநில சட்டசபைக் காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிரிந்தியங்குவதுபற்றி

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். நான் பத்திரிகைகளிலே படிக்கின்ற செய்தி நம்முடைய மாநிலத்திலே உள்ள சட்டசபைக் காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிரிந்து அதிலே ஒன்று திரு. ஜகஜீவன்ராம் அவர்களுடைய தலைமையிலே இயங்கக்கூடிய காங்கிரஸ் கட்சி என்றும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றி நான் பின்னாலே அறிவிக்க இருக்கிறேன். இது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.